# அகதிகள் சொந்த இடம் திரும்ப ராணுவம் மறுப்பு

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 29 இதழ் 247
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15 — 10 — 1992

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் தமிழ் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் திருமலைக்கு கொண்டுவரப்பட்ட

(4ம் பக்கம் பார்க்க)

## 2500 இல. தமிழ் அகதிகள் கப்பலில் நாடு திரும்புவர்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் சுமார் 2,500 பேர் இலங்கை திரும்ப தயாராயுள்ளதாகவும் பருவநிலை சீரடைந்ததும் இவர்கள் கப்பல் மூலம் திருப்பியனுப்பப்படுவார்கள் எனவும் தமிழக அகதிகள் மறுவாழ்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். வாசிகளுக்கு 6 மாதங்களின் பின்னரே அடையாள அட்டை வருகிறது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்கள் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு மூன்று மாதங்களின் பின்னரே சென்றடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளிலிருந்து வரும் அகதிகளுக்கு இடமளிப்பதில் ஜெர்மன் கூட்டரசு கட்டுப்பாடுவிதிக்க முடிவு

(பேர்லின்)

ஜெர்மனியில் அரசியல் புகலிடம் கோரி வரும் பெருமளவு வெளிநாட்டு அகதிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த ஜெர்மனியின் கூட்டணி அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், ஏனைய வளங்குன்றிய நாடுகளிலுமிருந்தும் பெருமளவு அகதிகள் ஜெர்மனி நோக்கி படையெடுக்கிறார்கள் என்றும் இவர்கள் அரசியல் அகதிகளல்லவென்றும் இவர்கள் உண்மையில் பொருளாதார அகதிகளே என்றும் இவ்வாறு லட்சக்கணக்கான அகதிகள் கடந்த சில மாதங்களுக்குள் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அகதிகள் வருகை ஜெர்மன் அரசை பெரும் சங்கடத்திற்குள்ளாக்கியிருப்பதாகவும் இதனையடுத்து ஜெர்மன் அதிபரின் கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி உட்பட இதர

(4ம் பக்கம் பார்க்க)

## பளை காவல் நிலையம் நேற்று திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல் துறையின் பணிமனை ஒன்று நேற்றுக் காலை 7 மணிக்கு பளை பிரதேசத்தில் திறந்து வைக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டியில் 10 லட்சம் ரூபா கொள்ளை

(சென்னை)

கொள்ளுப்பிட்டி லிபேட்டி பிளாசாவிலுள்ள கடையொன்றுக்குள் நேற்று முன்தினம் புகுந்த கொள்ளையர்கள் 10 லட்சம் ரூபாவைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்டோர் குமாரி கப்பலில் வந்தனர்

(புலோலி)

இராணுவத்தின் பிடியில் சிக்கிய அளவெட்டி, இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உட்பட 36 பேர் குமாரி கப்பல் மூலம் நேற்று நண்பகல் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

உற்றார், உறவினர்களைப் பிரிந்து இளவாலை கன்னியர் மடத்தில் அகதிகளாக இவர்கள் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது வேண்டுகோளை ஏற்று அப்பகுதிகளுக்குச் சென்றிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அவர்களை அழைத்து வந்து அங்கிருந்து மினிபஸ் வண்டி ஒன்றில் நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றனர். (150-61)

## இலங்கை தமிழ் இளைஞர் கைது

(சென்னை)

சென்னை அண்ணாநகர் மேற்கில் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக அகதிமுகாமில் இருந்த இலங்கை இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

சென்னையிலுள்ள அகதி முகாமிலிருந்த இந்த இளைஞரிடமிருந்து 15 பவுண் நிறையுள்ள தங்கப் பவுணும் பொலிசாரினால் மீட்கப்பட்டது. (கே)

## பன்னாட்டு நிதியம் 50 கோடி டொலர் கடன்

(லண்டன்)

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு பன்னாட்டு நிதியம் 50 கோடி அமெரிக்க டொலரை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட மூன்று ஆண்டுகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில்

(4-ம் பக்கம் பார்க்க)

# இளவாலையில் 20 இளைஞர்கள் விலங்கிட்ட நிலையில் மறியல்

## விடுவிக்கப்பட்டவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் கைது செய்யப்பட்ட 20க்கும் மேற்பட்ட இளைஞர்களை இராணுவத்தினர் தற்போதும் காலுகளுக்கு விலங்கிட்டே இளவாலையில் வைத்திருக்கிறார்கள்.

அளவெட்டிப் பகுதியில் அண்மையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்களில் 36 பேர் நேற்று இராணுவத்தினரால் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 36 பேரில் 12 ஆண்களும் 24 பெண்களும் குழந்தைகளும் அடங்குவார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## 28ம் திகதி புதிய கல்வி ஆண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழக 1991, 1992ம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு இம்மாதம் 28ந் திகதி ஆரம்பமாகுமென துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தெரிவித்துள்ளார். க

## காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

காரைநகர் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அராலி, மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினமிரவு ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இராணுவத்தினரின் ஷெல் குண்டுகள் மேற்படி பகுதிகளின் கடற்கரையோரப்பகுதிகளில் விழுந்து பெரும சத்தத்துடன் வெடித்தன.

இடையிடையே சூட்டுச்சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன. (139)

## சுதந்திரக் கட்சிக்குள் 'பௌத்த பிக்குகள் அமைப்பு' நிறுவும் முயற்சி தோல்வி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் "பௌத்த பிக்குகள் அமைப்பு" ஒன்றினை நிறுவ எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது.

சுதந்திர கட்சியில் அங்கத்தவர்களாக உள்ள பௌத்த பிக்குகள் தனியார் பௌத்த அமைப்பு ஒன்றினை நிறுவ எடுத்த முயற்சிக்கு கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தடை விதித்துள்ளார்.

ஏற்கனவே "ஹெல உறுமய" என்ற அமைப்பு சுதந்திரகட்சிக்குள் உருவாகி பிரச்னைகள் உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (கே)

வன வளம் காத்து மழை வளம் பெறுவோம்

## வரி விளம்பரம்


### நோவு வைத்தியம்

ஒட்டப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ். 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6888)

### விற்பனைக்கு

பாவித்த தரமான BigBen, China, மேசை மணிக்கூடுகள். ஜப்பான் சுவர் மணிக்கூடுகள், இருபாலாருக்குமுரிய பலதரப்பட்ட கடிகாரங்கள் சகாய விலையில் விற்பனைக்குண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6891)


# சகல கால்நடைகளுக்கும் தினமும் வைத்தியம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிறவுண்வீதி சந்தியில் உள்ள கால்நடை வைத்தியசாலையில் தினமும் சகல கால்நடைக்கும் வைத்தியம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வைத்தியசாலை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் சகல விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும் வேலைநாட்களில் காலை 8 மணி தொடக்கம் பி. ப. 4மணிவரை திறந்திருக்கும். சனி, ஞாயிறு போயா தினங்களில் காலை 8மணி தொடக்கம் பி. ப. 4மணிவரை திறந்திருக்கும்.

சனிக்கிழமைகளில் மட்டும் கோழிகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டு நோய் ஏற்படாத கோழிகளுக்கு மட்டும் இத்தடுப்பூசி போடப்படும். நோயுள்ள கோழிகளை தடுப்பூசிபோட கொண்டுவரவேண்டாமென்றும், நோய் வாய்ப்பட்டுள்ள கோழிகள் சம்பந்தமாக அலுவலகத்திற்கு நேரில் வந்து அதற்குரிய மாற்றுவழிகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் யாழ். மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி பொதுமக்களுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார். (154)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்க்கு கொழும்பில் சான்றிதழ்

(கொழும்பு)

யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்று இடம்பெயர்ந்து கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு கொழும்பில் சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

கலை, வர்த்தக, வர்த்தக முகாமைத்துவ இறுதிப்பரீட்சையில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 31-ந் திகதி காலை சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெறும். (கே)

# நீர் விநியோகம் தொடர்ந்து நடக்கிறது

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்டுவந்த மினி நீர்விநியோகத் திட்டங்கள் மின்சாரமின்மையால் தடைப்பட்டிருந்தன. தற்போது நீரிறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் இவை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் முதலாவது நீர்விநியோகத் திட்டம் சட்டநாதர் கோயில் அருகாமையிலும் இரண்டாவது திட்டம் அரியாலையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏனைய நான்கு நீர்விநியோகத் திட்டங்களும் விரைவில் பூர்த்தியாக்கப்படுமென யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (159-154)

## வலிப்பு மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தற்போது வலிப்பு மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் வலப்பு நோயாளிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர். (159)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் பொதுமுகாமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது கூட்டுறவாளர்களின் பிரச்சனைகள் குறித்து ஆராயப்படவுள்ளது. (159)

★ ★

(கொழும்புத்துறை)

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் அருள்மிகு ஸ்ரீ பூர்வீக நாகதம்பிரான் ஆலய கடல் தீர்த்தத்திருவிழா இன்று 15ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (154)

## யாழ். ஆஸ்பத்திரியில் இந்தியப் படையினுல் உயிரிழந்த 22 பேருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உயிரிழந்த யாழ். ஆஸ்பத்திரியை சேர்ந்த டாக்டர்கள் தாதிகள், சிற்றூழியர்கள் உட்பட 22 பேரின் 5-வது ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 21, 22ம் திகதிகளில் யாழ். வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் 22 பேரினதும் திருவுருவப்படங்களுக்கு மலர்தூவி மலர்மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகிறது. 22 சுட்டிகளில் தீபமேற்றப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து நினைவு இரங்கல் சொற்பொழிவும் இடம் பெறும். (56)

## மருந்து தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ். போதனு மருத்துவப் பணிமனையில் சில அத்தியாவசிய உயிர்காப்பு மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சேலைன், செக்ரோஸ் மற்றும் பல்வேறு வகையான நோய்த் தடுப்பூசி மருந்துகள் ஆகியவையே பற்றுக்ளறையாக உள்ளன எனத் தெரியவந்துள்ளது. (154)

## குழாய்க் கிணறுகள்

(யாழ்ப்பாணம்)

யூனிசெப உதவித்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு யாழ். மாநகரசபையினல் 21குழாய்க் கிணறுகள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 18 கிணறுகள் இதுவரை பூர்த்தியாகியுள்ளன மிகுதி விரைவில் பூர்த்திசெய்யப்படுமென யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார் (159)

## கால்நடை வைத்திய அலுவலகம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனைக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவந்த சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் கடந்த வாரம் தொடக்கம் சண்டிலிப்பாய்—உடுவில் டச்சு வீதியிலுள்ள தனியார் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கோழிகளுக்கு நேற்று நோய் வராது தடுப்பு ஊசி போடுவது, பசுக்களுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்ந்தும் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (72)

## இ. போ. ச ஊழியர் சம்பளம் வழங்கப்பட்டது

(கொழும்புத்துறை)

யாழ். மாட்டத்தைச் சேர்ந்த சகல போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கும் கடந்த யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய சம்பளப்பணம் அண்மையில் முழுமையாக கோண்டாவில் இ. போ. ச. சாலையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது

இச்சபையைச் சேர்ந்த உயரதிகாரிகள் அண்மையில் கொழும்பு சென்று இந்த நிலுவைச் சம்பளத்தை பெற்றுக்கொண்டு வந்து வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது (154)

## மாணவர் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் மன்னார் மாந்தையில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த யாழ். தொழில் நுட்பக் கல்லூரி பொறியியல் மாணவன் வேங்கைமாறன் நினைவாக தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் நேற்று முன்தினம் இரத்ததானம் செய்தனர். (159)

## இராசி பலன்

**15-10-1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு புரட்டாதி 29)**

சதுர்த்தி பி. இ. 12-35 வரை: கார்த்திகை பி. ப. 12-49 வரை மரணயோகம் சரிநாள் இராகுகாலம் பகல் 1-32 முதல் 3-02 வரை. சுப நேரம் காலை 7-32 முதல் 9-02 வரை.

மேடம்; பந்துக்கள் விரோதம், பிறருக்கு உதவுதல், பணலாபம்.

இடபம்: தாழ்மைப்படல், காரிய தடை, கோபவார்த்தை.

மிதனம்: செய்தொழில் கீர்த்தி, காரிய ஜெயம், புத்திரர் செலவு

கடகம்! இடையூறு, விரோதம், அலைச்சல்.

சிங்கம், உடல் ஆரோக்கிம் வீண்முயற்சி, நற்செய்தி

கன்னி: காரிய தடை, மன சஞ்சலம், பலவீனம்.

துலாம்: அலைந்து திரிதல், பெண்கலகம், யோசனை.

விருச்சிகம்: பந்துக்கள் பெருமை, தொழில் சிறப்பு, குடும்ப உறவு.

தனுசு; வெகுமானம்; அதிகார பதவி, காரியசிறப்பு.

மகரம்: பயனற்றசெய்கை, வயிற்றுவலி, பகை.

கும்பம்: குடும்ப சந்தோஷம், தொழில் செலவு, தான தருமம்.

மீனம்: காரியஜெயம், மன நிறைவு, சுபகாரியம்.

— ஜோஸ்யர்

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டத்தின் விபரம் வருமாறு:

அராலி இந்துக்கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மகாவித்தியாலமும், சென். ஹென்றிஸ் கலலூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் 17 வயதுப் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில்மோதுகின்றன.

19 வயதுப்பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியை எதிர்த்து செனு. ஹென்றீஸ் கல்லூரியும் நெல்லியடி மகா வித்தியாலயத்தை எதிர்த்து மகாஜனக் கல்லூரியும், சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன, (வி)

## சமயபாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவபரிபாலன சபையினர் நடாத்தும் சமயபாடப் பரீட்சை வருகிற நவம்பர் மாதம் 8-ந் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரையான மாணவர்களிடையே நடைபெறும். (159)

## சைவசமயபோட்டி முடிவுகள்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் இந்துசமய மன்றத்தினர் நவராத்திரி விழாவை முன்னிட்டு வட்டுக்கோட்டை பிரதேச மாணவர்களுக்கிடையே வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடாத்திய சைவசமயப் போட்டியில் முதல் மூன்று பரிசில்களைப பெற்றவர்கள் விபரம் வருமாறு:

ஆண்டு 1: 1. ர. துஷ்யரஞ்சன், 2. தமகிபா. 3. க. குஜேந்தினி,

ஆண்டு 2: 1. ந. சசிதரன், தே கமலினி, 2. வ. கேத்திரபாலன், 3. சி, ஜெகதீசன்

ஆண்டு 3: 1. க. பிரியதர்சினி, சு. சுஜிந்தா, த. தர்மினி. 2. க. நிமலன். சி. விநோதினி, 3. க. யதுஷ்சன்.

ஆண்டு 4: 1. யுகதிரன், 2 த. யுகதரன், 3 செ. பிரதீபா

ஆண்டு 5: 1. க. சனுஷா 2. க பிரதீபா, 3. ந. செந்தீபன்.

ஆண்டு 6: அ. பிரமிலா, 2. மோ. கோகுலன், 3. பிரதீபா

ஆண்டு 7: 1. பா. சிவமலர், 2. து. பிரியா, 3. க. மீரா.

ஆண்டு 8: 1. சீ. ஜெகந்தன், 2. ச. சிவசாமி. 3. கு. வேணுதாஸ்.

ஆண்டு 9: 1. க. ராஜசுதர்சன், 2. யோ. குமரன், 3. ஏ. கவிதா.

ஆண்டு 10: 1. க. காந்தரூபன், 2. த. தனதாசன். 3. அ இரஞ்சிதமலர்.

ஆண்டு 11: 1. த. கலையரசன், 2. சு. தேவகுமார். 3. கா. இளவழகன் (139)

## பிரதேச சபை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம பொதுசன நூல்நிலையத்தில் இயங்கிவந்த வலிகாமம் தெற்கு பிரதேசசபை தற்போது மீண்டும் சுன்னாகம் நவீன சந்தைக்கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவு பயிற்சி

(புலோலி)

பருத்தித்துறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சங்கத்தின் ஏற்பாட்டின் படி இடம்பெற்ற இந்த ஒருநாள் பயிற்சியினை கூட்டுறவு கல்வி உத்தியோகத்தர்கள் நடத்தினர்கள். (61)


## மரக்கன்றுகள் விற்பனைக்கு

மலைவேம்பு, இலுப்பை, வேம்பு, முதிரை, கடுக்காய் ஆகிய வனவளர்ப்புத் தாவரக் கன்றுகள் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உள்ளன. வாங்க விரும்புபவர்கள் கீழ் வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-2501)

## இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

### அபர பக்க சதுர்த்தி விழா

**15-10-92 வியாழன்**

புதிதாக வடிவமைக்கப்பெற்ற நவீன பல்லக்கில் விநாயகப்பெருமான் வீதியுலா வருவார்.

சிறப்பு நிகழ்ச்சிகள்,

சொற்பொழிவு:

பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை

இன்னிசைக் கச்சேரி:

பிரம்மஸ்ரீ எஸ். இராமநாதசர்மா அவர்கள்

அடியார்கள் அனைவரையும் மேற்படி விழாவில் பங்கு பற்றி விநாயகரின் அருள்பெற அழைக்கிறோம்.

உபயகாரர்

(சி-6892)

★ எகிப்து நில நடுக்கத்தில்

# 200க்கும் மேற்பட்ட மாணவர் உயிருடன் புதையுண்டனர்

(கெய்ரோ)

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தினால் இடிந்து வீழ்ந்த கட்டிடங்களினுள் சிக்கிய பாடசாலை ஒன்றிலிருந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயிருடன் புதையுண்டு போனதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்படும் என்ற அறிவிப்பினாலும், அச்சத்தினாலும் கெய்ரோவில் நகர மக்கள் நேற்றும் நேற்று முன்தினமும் தெருக்களிலும் வீதியோரங்களிலும் தங்கியிருந்தனர்.

கடந்த திங்கள் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 400 பேர்வரை உயிரிழந்தும், பல்லாயிரம்பேர் காயமடைந்தும். வீடுகள், யாடிகள், மருத்துவமனை என 200 கட்டிடங்கள் தரைமட்டமாகியுள்ளதாக அறிக்கை கூறுகிறது. ஆனால் செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் 1000 பேருக்குமேல் இறந்ததாக தெரிவித்துள்ளது.

மரண ஓலங்களின் மத்தியில் மீட்புப் பணியினர் தொடர்ந்து பணியாற்றுகின்றனர். இடிபாடுகளுள் உயிருடன் யாரும் இருக்கலாமெனவும் எண்ணப்படுகிறது.

கெய்ரோவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தற்காலிகமாக மக்களை தங்கவைக்க 1000 முகாம்கள் அமைக்கப்படுகின்றது.

ஆரம்ப மேலோட்டமாக பார்க்கும்போது சேதம் 150 மில்லியன் டொலரை மிஞ்சும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு முழுப்பொறுப்பையும் ஏற்று மீண்டும் நகரைக் கட்டி எழுப்பும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. (கே)

## ஒய்வூதியர்கள் விபரம் சேகரிப்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் ஒய்வூதியம் பெற்றுவருபவர்கள் விபரங்கள் அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பிரதேச செயலகங்கள் ஊடாக ஒய்வூதியம் வழங்கப்படவுள்ளதால மேற்படி விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

## குமாரி கப்பல் நாளை மன்னார் செல்கிறது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் நாளை 16ம் திகதி இங்கிருந்து மன்னாருக்குச் செல்கிறது.

இக்கப்பலில் யாழ்.மாவட்டத்துக்கென வந்த பொருட்கள் நாளை 16ம் திகதியுடன் இறக்கப்பட்டுவிடும் அதனையடுத்து மன்னார் மாவட்டத்துக்கென கொண்டு வரபபட்ட பொருட்களை இறக்குவதற்காக அன்றைய தினமே பருத்தித்துறையிலிருந்து மன்னாருக்குப் புறப்படும்

மன்னாரில் பொருட்களை இறக்கியதும் இக்கப்பல் மீண்டும் பருததித்துறை ஊடாக திருகோணமலைக்குச் சென்று ஒரு தொகுதி மாமூடைகளை ஏற்றிக்கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வரும். (61)

## மாதாந்த உதவிப் பணம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுபவர்கள், மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் தற்காலிகமாக செயற்பட்டுவரும் கிராம சேவை அலுவலகரிடம் தொடர்புகொண்டு தங்கள் மே, யூன் மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணத்தை பெற்றுக்கொவலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (72)

## அகதிகளுக்கு கூடாரங்கள்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நல்ல தரமான கூடாரங்களை வழங்கியுள்ளது. (72)

★ இன்று வெள்ளைப் பிரம்பு தினம்

# நான்கு கோடி மக்கள் விழிப்புலனற்று உள்ளனர்

யாழ்ப்பாணம்

அனைத்துலக வெள்ளைப் பிரம்பு தினம் இன்றாகும். இன்றைய நாளில் விழிப்புலனற்றோருக்கு தங்கள் திறமையை விருத்திசெய்ய சந்தர்ப்பமும் போதிய வசதியும் செய்து கொடுத்தல்வேண்டும்.

இவ்வாறு கோப்பாய் லயன்ஸ் கழக தலைவர் லயன் சண்முகநாதன் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்த குறிப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: இன்று உலகில் நான்கு கோடி மக்கள் விழிப்புலனற்று உள்ளனர். இவர்களில் எண்பது வீதமானோர் முறையான வழிகாட்டல், சிகிச்சை, சத்திர சிகிச்சை வசதி இல்லாமையிலேயே பார்வையின்றி தவிக்கிறார்கள்.

இவர்களுடைய இந்தக்குறைகளை நிறைவு செய்யுமுகமாக லயன்ஸ் சர்வதேசம் 'விழிப்புலனுக்கு முன்னுரிமை' என்ற பாரிய திட்டத்தை உலகளாவிய 40,000 லயன்ஸ் கழகங்கள் மூலம் நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது. அத்துடன் இலவச கண்சிகிச்சை முகாம்கள், மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கல், இலவச கண்ணாடி சத்திர சிகிச்சை ஆகிய சேவைகளையும் தீவிரப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சு)

# வாழ்க்கை திறன் பாடத்துடன் கடல் வளமும் இணையும்

## ஆலோசனை குழு சிபார்சு

(யாழ்ப்பாணம்)

கடல்வளம் பற்றிய அறிவினையும் பயன்பாட்டை பற்றிய அறிவும் மாணவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு துரைராஜா தலைமையில் இயங்கும் மீன்வளக் கைத்தொழில் அபிவிருத்திக்குழு சிபார்சு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கல்வித் திணைக்களமும், யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையினரும், தமிழீழ பொருளாதாரமிய மேம்பாட்டுக் கழகத்தினரும் இணைந்து செயற்திட்டமொன்றை வகுத்துள்ளனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஆண்டு 7, 8 மாணவர்களுக்கு வாழ்க்கைத்திறன் பாடத்திட்டத்தில் கடல் வளத்தையும் இணைத்து கற்பிப்பது என மேற்படி குழு தீர்மானம் செய்துள்ளது.

கல்வித் திணைக்களத்தின் ஆலோசனைப்படி தொண்டமானாறு வெளிக்கள நிலையமும், பல்கலைக்கழக விலங்கியல் துறையும் இணைந்து கற்றல் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கென வாழ்க்கைத்திறன் கற்பிக்கும் 15 ஆசிரியர்களும் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும் துறைசார் வள நிபுணர்கள் 15 பேரும் இணைந்து பாடத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளனர்

இதற்கான 2 நாள் கருத்தரங்கு கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் யாழ் பல்கலைக்கழக விலங்கியல் துறைமண்டபத்தில் நடைபெற்றது. கருத்தரங்கின் முடிவிலேயே மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (159)

## தொலைக்கல்வி பிரிவு ஆசிரிய பயிற்சிநெறி

(உடுவில்)

மகரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தொலைக்கல்விப் பிரிவில் ஆசிரிய பயிற்சிநெறிக்கு 1993ம் ஆண்டிற்கு ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கான விணணப்பங்கள் கோரப்படுகின்றன

இந்தப் பயிற்சிநெறியில் சேர்ந்துகொள்வதற்கு அண்மையில் பாடசாலைகளில் பயிலுனர் ஆசிரியர்களும் விண்ணப்பங்களை அனுப்பமுடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிலுனர் ஆசிரியராக நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் பயிற்சி நெறியில் சேர்ந்துகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## தீர்த்த திருவிழா

பருத்தித்துறை

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய சமுத்திர தீர்த்தத் திருவிழா நேற்று புதன்கிழமை நடைபெற்றது அன்றைய தினம் மு.ப. 10 மணியளவில் அருள்மிகு நாகேஸ்வரி சமேத நாகேஸ்வரப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் உற்சவம் ஆரம்பமானது. (52)

# சங்கீத,நடனதுறைகளுக்கும் பட்டங்கள் வழங்க முடிவு

(உடுவில்)

ஏனைய துறைகளுக்கு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் பட்டங்கள் போன்று சங்கீத-நடன துறைகளுக்கும் பட்டங்கள் வழங்க பலகலைக்கழக மானியஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதுவரை காலமும் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்பட்டுவந்தன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கீழ் தனிப்பிரிவாக அண்மையில் இயங்கத் தொடங்கிய மருதனார்மடம் நுண்கலைப்பீடத்தில் சங்கீதம், நடனம் ஆகியவற்றை கற்று சித்தியடைபவர்களுக்கு இனிமேல் அத்துறை சார்ந்த பட்டங்களை வழங்கலாம் என பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை காலமும் சங்கீத-நடன துறைகளுக்கு டிப்ளோமா, கலைமாணி சான்றிதழ்களே வழங்கப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

நுண்கலைப்பிரிவும் ஏனைய துறைகளைப்போலபட்டங்களை வழங்கும் அந்தஸ்துக்குஉயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் போதனாசிரியர்களாக கடமையாற்றிய ஆறுபேர் விரிவுரையாளர் தரத்திற்கு பல்கலைக்கழக மானியக்குழுவினால் நியமனம் பெற்றுள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப்பிரிவின் தலைவராகயாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா ஜெயராசா நியமனம் செய்யப்பட்டுள்ளார். (109)

# ஒவ்வொரு வருடமும் பத்து லட்சம் மக்கள் மலேரியாவினால் உயிரிழப்பு

(லண்டன்)

உலகில் வருடமொன்றிற்கு 10 லட்சம் மக்கள் மலேரியா நோய்க்கு ஆளாகி இறக்கிறார்கள் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

சுகாதார விஞ்ஞானத்தில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணப்பட்டிருந்தபோதும் ஒவ்வொரு வருடமும் மலேரியா நோயினால் இறப்போர் தொகை அதிகரித்தே வருகிறது.

மலேரியாநோயினால் உலகில் 60 விநாடிக்கு ஒருவர் என்ற கணக்கில் இறப்பு ஏற்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அண்மையில்வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மலேரியா நோய் தடுப்புத் திட்டங்களை அமுல்படுத்துவதில் பல நாடுகள் அக்கறை காட்டுவதில்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் கண்டனம் தெரிவித்துள்ளது. (கே)

திருமலையில்

# ஆறு தமிழ்க் கிராமங்களில் துரித சிங்களக் குடியேற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த ஆறு கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள்மூலம் தெரியவந்துள்ளது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும்,இப்பகுதி சில உதவி அரசாங்க அதிபர்களும் பாலம்போட்டாறு, உப்பாறு, இருல்குழி, ஆலங்கேணி ஈச்சந்திவு ஆகிய கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டுமுதல் இராணுவ நடவடிக்கைகள்மூலம் இக்கிராமங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் வெளியேற்றப்பட்டுவருவது தெரிந்ததே.

இப்பகுதிகளில் மேலும் புதிய குடியேற்றத்திட்டங்களில் எழுபது சதவீதம் சிங்களவர்களும், இருபத்தைந்து சதவீதம் முஸ்லிம்களும், ஐந்து சதவீதம் மட்டுமே தமிழர்களும் குடியேற சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதி வழங்குகின்றனர். இதையடுத்து இத்தகைய குடியேற்றத்திட்டங்களில் போய் குடியேறப் பெரும்பாலான தமிழ் மக்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## 'ரக்கிங்' வேண்டாம் துணைவேந்தர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் புதிய மாணவர்களை இன்முகத்துடன் வரவேற்குமாறும் 'ராக்கிங்' கில் ஈடுபட வேண்டாமெனவும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சுற்றுநிருபம் ஒன்றை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

'ராக்கிங்' நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் ஒரு வருடம் கல்வியாண்டிலிருந்து கல்வி கற்காது இடைநிறுத்தி வைக்கப்படுவர் எனவும் அச்சுற்று நிருபத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்க்கான கல்வியாண்டுஇம்மாதம் ஆரம்பமாகிறது. (159)

# தமிழ் எம்.பி.க்களுக்கான நிதி

## வேறு பகுதிகளுக்கு மாறிப்போகின்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் வருடாந்தம் ஒதுக்கும் பணம் முழுவதையும் அவர்கள் விரும்பினால் வேறு மாவட்டங்களுக்கு வழங்கலாம் என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:- இதற்கு முன்பு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 25 வீத மான தொகையை மாத்திரமே தாம் விரும்பும் பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடியதாக இருந்தது.

புதிய மாற்றத்தின் கீழ் முழுத்தொகையையும் நான்கு மாவட்டங்களுக்கு மேற்படாமல் அவர்கள் கொடுக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது (சு)

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணி முதல் 5 மணிவரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

### யாழ். வாசிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செயலகத்திலிருந்து கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்படும் இவ்விண்ணப்பங்கள் நேரடியாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திடம் சென்று அங்கு மிக நுணுக்கமாக பரிசீலனை செய்த பின்னரே ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் இதனால் மூன்று மாதங்கள் காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்விண்ணப்பங்கள் திணைக்கள அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்பட்டு அடையாள அட்டை தயார் செய்து வர மேலும் மூன்று மாதம் நீடிப்பதுடன் அவசர தேவைக்கோ சாதாரணமாகவோ விண்ணப்பிப்பவர்களுக்கு 6மாதங்களின் பின்பே அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்படுமென்று கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு அவசர தேவைகளுக்காகத் தமது அடையாள அட்டைகளைப் பெறச் சென்ற யாழ். வாசிகளுக்கு அத்திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (71)

### புனர்வாழ்வு வழங்கப்பட்ட இளைஞர்க்கு வெளிநாடுகளில்

# தொழிற் பயிற்சி

(கொழும்பு)

தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் தொழிற்பயிற்சிகளை வழங்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 14 இளைஞர்கள் விரைவில் ஜப்பானுக்குச் செல்லவுள்ளனர்.

ஏற்கனவே பல்வேறு தடுப்பு முகாம்களிலிருந்து 34 இளைஞர்கள் வெளிநாடுகளில் தொழிற்பயிற்சி பெற்றுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இளவாலையில் 20 இளைஞர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பருத்தித்துறையிலிருந்து அழைத்து வந்து யாழ். பஸ் நிலையத்தில் நண்பகல் 2 மணிக்கு பிரத்தியேக பஸ் ஒன்றில் அவர்களின் சொந்தஇடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

விடுதலை செய்யப்பட்டவர்களே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்கள். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் கடந்த 27 நாட்கள் தாம் பட்ட வேதனைகளைப் பற்றி இவர்கள் மேலும் தெரிவிக்கையில்:-

இராணுவத்தினர் எம்மைக் கைது செய்து கொண்டு மற்றைய இடங்களுக்குச் செல்லும்போது தம்மைக் கேடயமாகப் பாவித்துக் கொண்டு சென்றார்கள். தாம் முன்செல்லத் தயங்கும்போது எம்மை கடுமையாகத் தாக்கினார்கள். அவர்கள் பெண்களையும் தாக்கினார்கள்.

அளவெட்டியிலிருந்து இளவாலைக்கு எம்மை அழைத்து வரும்போது வழிகளில் பல சடலங்களைக் கண்டோம்.

இளவாலையிலுள்ள கொன்வென்டிலும், அருகிலுள்ள பாடசாலையிலும் எம்மைத் தங்க வைத்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை நாம் அங்கேயே தங்கியிருந்தோம். மற்றும் பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட மக்கள் அனைவரும் அங்குதான் இருக்கின்றார்கள்.

நாம் கைது செய்யப்பட்ட ஆரம்ப நாட்களில் தமிழ் தெரிந்த இராணுவ அதிகாரிகளும், பொலிஸாரும் எம்மை இரவு நேரங்களில அடிக்கடி விசாரணை செய்தார்கள்

இராணுவத்தினர் எமக்கு உணவுப் பொருட்களைத்தந்து சமைத்து உண்ணும்படி கூறினார்கள் சிலவேளை உணவுப் பார்சல்களும் தந்தார்கள். இளவாலைப்பகுதிகளில் பிடிபட்ட மக்களை பகல் நேரங்களில் அவர்களின் வீடுகளுக்கு சென்று வர அனுமதிக்கின்றார்கள், ஆனால் இரவுவேளைகளில் அவர்கள் மீண்டும் பாடசாலை முகாம்களுக்கு வந்துவிடவேண்டும்.

சமைப்பதற்காக விறகுகள் சேகரிக்கச் செல்லும்போது, பல வீடுகள் உடைக்கப்பட்டு, பொருட்கள் வெளியில் வீசப்பட்டும், சில வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டு இருப்பதையும் கண்டோம். நாள் பூராவும் எம்மை பொலிஸாரே காவல் காப்பார்கள். இரவு நேரங்களில் பெண்கள் குழந்தைகள் தங்கியிருக்கும் பகுதிகளை பெண் பொலிஸாரும் காவல் காப்பார்கள். நேற்று முன்தினம் கொழும்பிலிருந்துவந்த ஒரு பொலிஸ் அதிகாரி குறிப்பிட்ட எம்மை மட்டும் அழைத்து நீங்கள் உங்கள் சொந்த இடங்களுக்கு செல்ல விரும்புகின்றீர்களா? எனவினவினார். நாம் தயக்கமின்றிஆம், என்று கூறினோம். "சந்தோஷமாகச் சென்று வாருங்கள்" என்றுகூறிவிட்டுச் சென்றார்.

நேற்றுக் காலை இராணுவ வண்டி ஒன்றில் நாம் அனைவரும் ஏற்றப்பட்டு பலாலிக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து காங்கேசன் துறைக்கு சிறுபடகில் வந்தோம். பின்பு பெரிய கப்பலில் ஏற்றப்பட்டு பருத்தித் துறைக்கு கொண்டுவரப்பட்டோம்.

எமது உறவினர், பிள்ளைகள் தற்போது எங்கு இருக்கின்றார்கள் என்பது எமக்கு தெரியாது இனிமேல்தான் அவர்களை நாம் தேடப் போகின்றோம் என்றும் கூறினார்கள். (வி)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் வள்ளியம்மை

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவரும் காலம் சென்ற வல்லிபுரத்தின் (புகையிரத இலாகா காங்கேசன்துறை) மனைவியும், கொக்குவில் கிழக்கு உடையார் லேனில் தற்போது வசிப்பவரும் ஆகிய வள்ளியம்மை 14-10-92 அன்று காலமாகிவிட்டார். அன்னார் ஜெயராசா, ஜெயராணி, புஷ்பராணி (ஜெர்மனி, மகேந்திரராசா (ஆசிரியர் அராலி இந்துக் கல்லூரி), காலம்சென்ற மகேந்திர ராணி ஆகியோரின் தாயாரும், பஞ்சாட்சரநாதன (சுழிபுரம் பிரதேச சபை), இலட்சுமிகாந்தன் (ஜெர்மனி), கதிர்காமநாதன் (புகையிரத திணைக்களம்), மல்லிகாமலர், மாலினி ஆகியோரின் மாமியாரும், கோபிதா, சுஜீந்தா, துவாரகா, நர்மதா, நிசான் (ஜெர்மனி), ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் காலம்சென்ற புவனேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (வியாழக்கிழமை 15-10-92) கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:

மகன் வ. மகேந்திரராசா

உடையார் லேன், கொக்குவில் [சி- 6893]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81

### மரண சாசன வழக்குகள்

## மூன்று மாத காலத்தில் விசாரிக்க ஏற்பாடு

(கொழும்பு)

மரண சாசனம் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தையும் மூன்று மாதங்களுக்குள் விசாரித்து முடிக்கும்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதி, உயர் கல்வியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்ற கட்டிடத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வி.பி.சிங், யாதவ் நேற்று விடுதலை

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமரும், ஜனதாதள் தலைவருமான வி. பி. சிங், மற்றும் முன்னாள் உத்தரப் பிரதேச முதல்வர் மொலாயம் சிங் யாதவ் ஆகியோர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

உத்தர பிரதேசத்தில் கரும்பு தோட்ட விவசாயிகள் மீது பொலிசார் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட போதே இவர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர்.

இதே வேளையில் மேற்படி தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக நேற்று புதன்கிழமை புதுடில்லியில் ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட சுமார் 1,400 ஜனதாதள் தொண்டர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். (க)

### 2,500 இல தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுத்துறை சிறப்பு ஆணையாளர் நீ என. ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நாகர் கோவிலில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 82 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் தமிழகத்தில் உள்ளதாகவு இதுவரையில் 24 ஆயிர பேர் இலங்கைக்கு அனுப்பபட்டுள்ளதாகவும் இவ் அகதிகளுக்கு மத்தியஅரசு 50 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவித்தார். (க)

### வெளி நாடுகளிலிருந்து

1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு கட்சிகளும் இணைந்து கொள்கைப பிரகடனம் ஒன்றை அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

★ ஜெர்மனியில் புகலிடம் கோரும் ஒவ்வொருவருக்கும் பரிபூரண விசாரணைத் திட்டம் ஒன்று வழங்கப்படவேண்டும்.

★ ஜெர்மனியில் குடிவரவு அதிகாரிகளுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். அதாவது அகதிகள் எந்த நாட்டிலிருந்து வருகின்றார்களோ அந்த நாடுகளில் தீர்க்க முடியாத பிரச்னைகளை அகதிகள் எதிர்நோக்கவில்லையென்று தீர்மானிக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

மேற்படி தீர்மானங்களுக்கு ஜெர்மன் எதிர்க்கட்சி அவ்வளவு வரவேற்பு கொடுக்கவில்லையென்றும் ஜெர்மனியின் அரசியல் யாப்பில் இந் நடவடிக்கை புதிய சிக்கல்களை தோற்றுவிக்கலாம் என்றும் அரசியல விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் ஜெர்மனிக்குள் அகதிகள் வருகைக்கும், சமீப காலமாக அகதி முகாம்களில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (க)

### கொள்ளுப்பிட்டியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு காசாளர் பணத்தை எண்ணிக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தவேளை திடீரெனப் புகுந்த கொள்ளையர்கள் 'பிஸ்ரல்' ஒன்றைக் காட்டிப் பயமுறுத்திக் காசைப் பறிக்க பின் 'ஓட்டோ'வில் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (கே)

### அகதிகள் சொந்த இடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவனியா, திருமலை, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த அகதிகள் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கின்றார்கள்.

இவர்களை இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறுவதற்கு தறபோது மறுப்புத் தெரிவித்துள்ளனர். (வி)

### பன்நாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் பகுதியாக தற்போது மேற்படி நிதியம் 16 கோடி 40 லட்சம் டொலரை வழங்கியுள்ளது.

இலங்கை எதிர்வரும் மூன்று வருட காலப் பகுதியில் பணவீக்கத்தையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் அந்நிய நாட்டு மூதலீட்டை ஊக்குவிப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கும் வழிசெய்ய வேண்டும் என்று பன்நாட்டு நிதியம் இலங்கைக்கு நிபந்தனை விதித்துள்ளது. (வி)

### பளை காவல் நிலையம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இப்பணிமனையை தமிழீழ விடுதலை இயக்க நிதிப்பொறுப்பாளர் திரு. தமிழேந்தி திறந்து வைத்தார். இவ்வைபவத்தின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை திரு. தமிழேந்தியும், காவல் துறைக் கொடியை, காவல் துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசனும் ஏற்றி வைத்தார்கள்.

இப்பணிமனையில் மிருசுவில், எழுதுமட்டுவாள் முகமாலை, புலோப்பளை, பளை, புதுக்காட்டுச்சந்தி, இயக்கச்சி, ஆகிய பிரதேசத்தில் உள்ள மக்கள் தங்கள் புகார்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [வி]